வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, நவம்பர்- 2017

# Term Examination, November - 2017

| தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் | தரம் :- 12 (2019) | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

## பகுதி - I


(1) தகவல்களை வெளியிடுவதற்குப் பயன்படுவது,
(1) தகவல் (2) தொடர்பாளர் (3) ஊடகம்
(4) பெறுநர் (5) தாக்கம்

(2) பின்வருவனவற்றில் வெகுசன தொடர்பாடலுடன் தொடர்புபட்டவையாக கொள்ளக்கூடியது
(1) தீ முட்டல், மணியடித்தல் (2) அச்சு ஊடகம், வானொலி
(3) கூடக்குரல், ஊதுகுழல் (4) சினிமா, முரசறைதல்
(5) ஓவியம், சினிமா

(3) பின்வருவனவற்றில் கட்புல செவிப்புல ஊடகம் அல்லாதது
(1) பல்லூடகம் (2) சலனப்படங்கள்
(3) இலத்திரனியல் நூல் (4) மாதிரி உருக்கள்
(5) தொலைக்காட்சி

(4) • இருவழி தொடர்பாடலுக்கு ஊக்கமளித்தல்
• சக்தி வாய்ந்த ஊடகத்தைப் பயன்படுத்தல்
• மொழியை நேர்த்தியாக பயன்படுத்தல்
• வெளியாக குறியீடுகளை நீக்குதல்

தொடர்பாடல் செயன்முறையில் இவ் இயல்புகள் கவனத்தில் கொள்ளப்படுதல் பின்வரும் எச்செயன் முறையை வலுப்படுத்துவதற்கு உதவும்
(1) பெறுகை (2) ஊடுகடத்தல் (3) அனுப்புதல்
(4) பின்னூட்டல் (5) தாக்கம்




(5) • மீள் தொடர்பு காணப்படும்
• தடைகள் குறைவாக காணப்படும்
• தகவலாளர் பெறுநர் தொடர்பு வலுவுடையதாக காணப்படும்
இக் கூற்றுக்களுக்கு இயைபாக அமையக் கூடியது
(1) ஒரு வழித்தொடர்பு (2) இரு வழித்தொடர்பு
(3) முறைசார தொடர்பு (4) மக்கள் தொடர்பு
(5) முறைசார் தொடர்பு

(6) மேற்குறித்த வரிப்படம் முறைசாராத் தொடர்பாடல் சம்பவமொன்றை எடுத்துக் காட்டுமாக இருத்தால் ஒரு நபர் தனது தெரிவின் படியான வெவ்வேறு தனிநபர் தொகுதியினருக்கு தகவலை வழங்குபவராக இருப்பின் அது அழைக்கப்படுவது
(1) நிகழ்தகவுச் சங்கிலி என
(2) புறணி பேசுதல் சங்கிலி என
(3) தனிச் சங்கிலி என
(4) கொத்தணிச் செங்கிலி என
(5) கிடையான தொடர்பு என

(7) பின்வருவனவற்றுள் எது தொடர்பாடலின் அடிப்படை கூறாக அமையாதது?
(1) மூலம் (2) இடையூறு (3) பின்னூட்டம்
(4) வாயிற்காப்போர் (5) தொடர்பாடல் வழி (Channeel)

(8) கொத்தணி முறையில் இனங்காணக்கூடிய தொடர்பாடல் வகை
(1) அகமுகித் தொடர்பாடல் (2) குழுத்தொடர்பாடல்
(3) ஆளிடைத் தொடர்பாடல் (4) வெகுசன தொடர்பாடல்
(5) கட்புலத் தொடர்பாடல்

(9) பின்வருவனவற்றில் குழுத்தொடர்பாடலுடன் தொடர்புபட்ட நுட்பங்கள்
A - விழிவழித்தொடர்பாடல் B - தொழில் நுட்பம்
C - பேச்சுத்திறன் D - கலங்களை விளக்கு
E - கருவிகளை கையாளும் நுட்பம்
(1) ABC (2) BCD (3) ACD (4) CDE (5) DEC

(10) லெனின், மாக்ஸ், ஏஞ்சல் ஆகியோரின் சிந்தனைகள் அடையாளப்படுத்துவது
(1) கோவியத் பொதுவுடமைக் கோட்பாட்டை (2) சமூகப் பொறுப்பு கோட்பாட்டை
(3) தாராண்மை வாதக் கோட்பாட்டை (4) சுதந்திரவாதக் கோட்பாட்டை
(5) ஆதிக்கவாதக் கோட்பாட்டை

(11) பேச்சு மொழியின் பரிணாம வளர்ச்சி எழுத்து மொழிக்கு வித்திட்டது. ஆரம்பகாலத்தில் சித்திர எழுத்துக்களும் ஓவிய எழுத்துக்களும் பயன்படுத்தப்பட்டமைக்கான ஆதாரங்களாகக் கொள்ளக் கூடியவை முறையே
(1) ஸ்பெயின் அல்மிரா குகைச்சித்திரம், சிகிரியாஓவியம்
(2) இந்தியாவில் அயந்தா ஓவியம், பிரான்ஸ் லக்னோ, குகைச்சித்திரம்
(3) சிகிரியா ஓவியம் அயந்தா ஓவியம்
(4) ஸ்பெயின் அல்டமீரா குகைச்சித்திரம் பிரான்ஸ் லக்னோ குகைச்சித்திரம்
(5) சிகிரியா ஓவியம், பிரான்ஸ் குகைச்சித்திரம்

(12) சமூக மாற்றத்திற்காக கருத்தியலை உருவாக்குவதில் தனி மனிதனின் விருப்பம், விழ்ப்புணர்வு மதிப்பிடல், முயன்று பார்த்தல் உள்வாங்கும் செயற்கூறுகள் தொடர்புபட்டமையும் எண்ணக்கரு
(1) ஜனநாயக தொடர்பாடல் கோட்பாடு (2) சமூகப் பொறுப்புடமை கோட்பாடு
(3) அபிவிருத்தித் தொடர்பாடல் கோட்பாடு (4) சோவியத் ரஷ்யக் கோட்பாடு
(5) ஆதிக்கக் தொடர்பாடல் எண்ணக்கரு

(13) எழுத்து மூல தகவல் தொடர்பின் பாதகமான அம்சமாக அமையாதது?
(1) சந்தேகங்களை தெளிவுபடுத்த முடியாது
(2) உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியாது
(3) ஆவணமாக எப்போதும் பேணலாம்
(4) செய்தி கடினமானதாக அல்லது சிக்கலானதாக அமையும் போது தாக்கம் குறைவாக அமைதல்.
(5) செய்தியை யதார்த்த பூர்வமாக வெளிப்படுத்தல் கடினம்.

(14) வெகுசனத் தொடர்பாடற் செயன்முறையில்
(1) முறைசார் நிறுவனங்களின் இருப்பு
(2) தொழினுட்ப உபகரணங்களின் மிகுதியான பயன்பாடு
(3) பல வாயிற் காப்பாளர்களின் தலையீடு
(4) தொடர்பாடு பவருக்கும் பெறுநகருக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பு
(5) வணிக அடிப்படையிலான இலாப நோக்கு

(15) வெகுசன ஊடகங்களின் பொறுநர்கள்
(1) செயற்படுநராயிருப்பர் (2) வேறுபட்ட பண்பினராயிருப்பர்
(3) ஒருமித்திருப்பர் (4) ஒரே வகைப் பண்பினராயிருப்பர்
(5) மாறாத்தன்மையினராயிருப்பர்

(16) தொடர்பாடல் எண்ணக்கரு (கோட்பாடுகள்) தொடர்பான இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - ஊடகங்கள் அரசின் நோக்கங்களை நிறைவேற்றச் செயலாற்றல்

B - சுதந்திரமான ஊடக போக்கு காணப்படல்

C - சமூகத் தொகுதியில் புதிய எண்ணக்கருக்களை, சிந்தகைகளை உருவாக்குதல்

D - பொதுவான புரிந்துணர்வினை சமூகத்தில் கட்டியெழுப்புதல்

E - பேண்தகு மாற்றங்களை சமூகத்தில் உருவாக்குவதற்கு பொருத்தமான நடத்தைகளுக்கு ஊக்குவிப்பு வழங்குதல்

• மேற்குறித்த கூற்றுக்களில் அபிவிருத்தி தொடர்பாடல் எண்ணக்கருவை குறிப்பன.

(1) A யும் B யும் (2) B யும் D யும் (3) D யும் C யும்

(4) Bயும் Cயும் D யும் (5) Cயும் Dயும் Eயும்

(17) மிக முக்கிய தீர்மானங்களை எடுப்பதற்கு கூட்டப்படும் குழு

(1) கொள்கைக்குழு (2) எழுமாறான குழு (3) தெரிவுக் குழு

(4) கற்றல் குழு (5) செயற்பாட்டு குழு

(18) "சமூகத்தின் எதிர்பார்ப்புக்கேற்ப சமூக வாழ்க்கை சந்தர்ப்பங்களின் போது நடந்து கொள்ள வேண்டிய முறைகளைக் கற்பது சமூகமயமாக்கல் செயன்முறையாகும்"

A - போலச் செய்தல் B - பின்பற்றுதல் C - தகவல்திரட்டல்

D - வகிபாகம் ஏற்றுதல் E - தேடல் உணர்வு

• இவற்றில் சமூகமயமாக்கல் காரணிகளுன் மிகத் தொடர்புள்ளவை

(1) A,B மாத்திரம் (2) A,B,D மாத்திரம் (3) C,D,E மாத்திரம்

(4) A,B,C,E மாத்திரம் (5) A,B,C,D,E ஆகியன எல்லாம்

(19) சமூகப் பண்பு வளர்ச்சி நிலையாகக் கொள்ள முடியாதது

(1) சமூக நல்வாழ்வுக்கு பிறழ்வான நடத்தை முறைகளை பின்பற்றுதல்

(2) சமூக நல்வாழ்வுக்கான நடத்தை முறைகளைக் கற்றல்

(3) சமூக நல்வாழ்வுக்கு ஒவ்வாத நடத்தை முறைகளை தவிர்த்தல்

(4) சமூகத்தில் முறைகளை பழகிக் கொள்ளுதல்

(20) பூகோள தகவல் தொடர்பு தன்மையுடன் தொடர்புபடாதது

(1) அச்சு இயந்திர அறிமுகமும் அதன் விரிவாக்கங்களும்

(2) செய்மதி வழி மூலமான தொடர்பு விரிவாக்கங்கள்

(3) கணனியை அடிப்படையாகக் கொ்டண தொடர்பு நிலைகள்

(4) நவீன ஊடக பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்ட தொடர்பு நிலைகள்

(5) சமூக ஊடக பயன்பாட்டின் விரிவாக்கங்கள்

(21) தகவல் மூலதாரங்களின் முக்கியத்துவம் தொடர்பாக பின்வரும் கூற்றுக்கள் தரப்படுகின்றன.

A - செய்தி அறிக்கையிடலுக்கு ஆதாரமாகின்றன

B - சம்பவம் தொடர்பிலான பல்வேறுபட்ட தகவல்களை உறுதிப்படுத்துகின்றன

C - செய்தி அறிக்கையிடல் வடிவ தத்துவத்தை (News Reporting) வலுப்படுத்துகின்றன.

D - செய்தியின் பின்னூட்டல் செயன்முறையை இழிவளவாக்குகின்றன.

மேற்குறித்த கூற்றுக்களில் சரியானவை

(1) Aயும் Bயும் மாத்திரம் (2) Aயும் Cயும் Dயும் மாத்திரம்

(3) Aயும் Bயும் Cயும் மாத்திரம் (4) Aயும் Bயும் Dயும் மாத்திரம்

(5) A,B,C,D ஆகிய எல்லாம்

(22) தொலைபேசி வழிப்பாதையின் ஒரு முனையில் இருந்து வரும் செய்தி அடுத்த முனையில் ஒலி வெளிப்பாடாக அமைவதை அடையாளப்படுத்துவது.

(1) கடத்துதல் (Tramsmission)
(2) பார்வை நோக்கு (Perception)
(3) குறிமுறை (Coding)
(4) குறழமுறையாக்குதல் (encoding)
(5) குறிமுறைய விழ்த்தல் (decoding)

(23) ஒபொது வாழ்க்கைமுறை (Common life sytle) தொடர்பில் ஒரு விழுமிய அமைப்பொழுங்கின் தேவையை மக்களுக்கு அறிவுறுத்தும் ஊடகப் பணியோடு தொடர்புடையது,

(1) பரப்புரை (Propoganda)
(2) சுய எண்ணக்கரு (Self- Concept)
(3) சமூகமயமாதல்
(4) ஆழ்பரிவு (Empathy)
(5) பார்வை நோக்கு

(24) ஒரு சமூகத்தில் வர்க்க வேறுபாடு அதிகம் இழி வளவாக்கப்படுவதை ஊக்குவிக்கும் பண்பாட்டு வகை மாதிரி

(1) நாட்டாரியற் பண்பாடு
(2) வெகுசன ஊடகப் பயன்பாடு
(3) செம்மைப் பண்பாடு
(4) இனப் பண்பாடு
(5) பாரம்பரியப் பண்பாடு

(25) தனது கடந்த கால அனுபவங்களைக் கொண்ட நாவல் ஒன்றை ஒரு செய்திப் பத்திரிகையில் அத்தியாயங்பளாக் வெளியிடும் எதிர்பார்ப்புடன் உருவாகிய எழுத்தாளர்,பின்வருவனவற்றுள் எத்தகைய தொடர்பாடல் வகையைப் பயன்படுத்தியவர் ஆகிறார்?

(1) தனியாள் (அகமுகி) தொடர்பாடல்
(2) வெகுசனத் தொடர்பாடல்
(3) கூட்டுத் தொடர்பாடல்
(4) எழுத்துத் தொடர்பாடல்
(5) ஆளிடை தொடர்பாடல்

The National e-learning Portal for The General Education

## பகுதி - II

### ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

(1) 'ஒரு சமுதாயத்தின் நிலவுகை ஆளிடைத் தொடர்பிலே தங்கியுள்ளது'

(1) சிறந்த முறையில் தொடர்பாடலை மேற்கொள்வதற்கு தொடர்பாடல் திறன்களும் தேர்ச்சிகளும் அவசியமாகும். அந்த வகையில் ஆளிடைத் தொடர்பாடல் தேர்ச்சிகள் நான்கினைக் குறிப்பிடுக.

(2) கேட்டல் தேர்ச்சியின் முக்கியத்துவங்கள் நான்கினைச் குறிப்பிட்டு அவற்றில் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக.

(3) கூட்டுத் தொடர்பாடல் ஒன்றில் எழக்கூடிய இடையூறுகளின் இரண்டு பிரதான வகைகளை உதாரணங்களும் விளக்குக.

(4) கூட்டுத் தொடர்பாடலுக்கும் வெகுசனத் தொடர்பாடலுக்கும் இடையிலான வேறுபாட்டை நான்கு அடிப்படை அம்சங்களின் கீழ் விபரிக்குக.

(2) 'தொடர்பாடல் செயன்முறை என்பது தொடர் செயன்முறையாகவும், வலுவுடைய இயங்கியல் தன்மை கொண்ட செயற்பாடாகவும் காணப்படுகின்றது.'

(1) தொடர்பாடல் செயன்முறை பற்றிய வரைவிலக்கணத்தை முன்வைத்த நான்கு அறிஞர்களை குறிப்பிடுக.

(2) அகமுகி (தன்னக) தொடர்பாடலின் நான்கு இயல்புகளை பெயரிட்டு, அவற்றுள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக.

(3) தொடர்பாடலின் அடிப்படை அம்சங்களை நான்கைப் பெயரிட்டு, அவற்றுள் இரண்டினை விபரிக்குக.

(4) முறைசாரத் தொடர்பாடலின் வடிவங்கள் மூன்றினை உதாரணங்களுடன் விவரிக்குக.

(3) "சமூகம் என்பது ஓர் இயற்கையான ஒழுங்கமைப்பு"

(1) சமூகமயமாதலில் செல்வாக்குச் செலுத்தும் நான்கு நிறுவனங்களைப் பெயரிடுக.

(2) பிள்ளைகள் சமூகமயமாதலில் தொலைக்காட்சி ஊடகம் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகிறது என்பதை சுருக்கமாக விவரிக்குக.

(3) பிரசை இதழியால் (Citizen Journalism) என்பதைச் சுருக்கமாக அறிமுகப்படுத்தி, அதன் இயல்புகள் நான்கினை விபரிக்குக.

(4) பூகோளமயமாதல் எண்ணக்கருவுடன் தொடர்புடைய நான்கு அம்சங்களின் அடிப்படையில் காட்டுரை ஒன்றை 250 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.

(4) "எந்தவொரு நாட்டிலும் தமக்கே உரிய தொடர்பாடல் கோலம் ஒன்று விருத்தியடைந்து இருக்கும்."

(1) மாற்று ஊடகம் அல்லது எதிர்ப்பு ஊடகம் ஒன்றின் பிரதான பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(2) அறிவுச் சமூகத்தின் பண்புகள் நான்கினைக் குறிப்பிட்டு அவற்றுள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக.

(3) தொடர்பாடலுக்கும் - சமூகத்திற்குமுள்ள தொடர்பினை ஆராய்க.

(4) சமூகத்தின் தோற்றம் வளர்ச்சி பற்றி விளக்குக.

(5) (1) தொடர்பாடல் பற்றிய வில்பர் ஷிராமின் வரை விலக்கணத்தைத் தருக.

(2) சமூகப் படிமம் என்ற எண்ணக்கருவைச் சுருக்கமாக விளக்குக.

(3) தொலைக்காட்சி ஊடாக விளம்பரங்கள் நுகர்வோருக்கு எவ் வகையில் முக்கியம் வாய்ந்தது என்பதை நான்கு வழிகளில் சுருக்கமாக விளக்குக.

(4) "உளரீதியான விம்பங்களை உருவாக்குவதில் தொலைக்காட்சி ஊடகம் மக்கள் மத்தியில் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றது. தொலைக்காட்சி ஊடகத்தின் தனித்துவமான இயல்புகள் 3 இனைக் குறிப்பிட்டு விளக்குக.

(6) 'சில நாடுகளில் நூலொன்றை அச்சிடுவதற்கு முன்னர் அதன் கையெழுத்துப் பிரதிக்கு அரசாங்க அதிகாரிகளின் அனுமதியைப் பெற்றாக வேண்டும்.'

(1) மேற்படி சந்தர்ப்பத்துடன் தொடர்புடைய தொடர்பாடல் எண்ணக்கருக்கள் இரண்டினைப் பெயரிடுக.

(2) வெகுசன ஊடகங்களில் வாயிற்காப்பாளர்கள் வகிபங்கினால் செய்திகளில் ஏற்படும் மாற்றங்கள் இரண்டை சுருக்கமாக விளக்குக.

(3) தற்கால வெகுசன ஊடகங்கள் பெறுநர்களைக் கவர்வதற்காகப் பயன்படுத்தப்படும் உபாயங்கள் நான்கினைப் பெயரிட்டு அவற்றுள் இரண்டினை உதாரணங்களுடன் விளக்குக.

(4) தொடர்பாடலில் ஏற்படக் கூடிய இடையூறுகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றினால் ஏற்படக் கூடிய தாக்கத்தினை விளக்குக.

(7) தொடர்பாடல் ஒரு கூட்டிணைப்புச் செயன்முறையாகும்

(1) தொடர்பாடலின் அடிப்படை அம்சங்கள் நான்கைப் பெயரிடுக.

(2) தனியார் ஒருவர் உடல்மொழியைப் பாவித்து (Body Language) அளிக்கக்கூடிய நான்கு வாய்மொழியில்லாத தொடர்பாடல் வழிமுறைகளைப் பெயரிட்டு அவற்றுள் ஒன்று பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(3) பிரசைகள் (குடிசார்) ஊடகவியலாளர் எவ்வாறு வெகுசன ஊடகவியலாளரிடமிருந்து மூன்று வழிகளில் வேறுபடுகிறார் என்பதை விபரிக்குக.

(4) இரண்டு படிநிலை எண்ணக்கருவை வரிப்படத்துடன் குறிப்பிட்டு அதன் அடிப்படைப் படிநிலைகள் இரண்டை விபரிக்குக.